# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண். 49/2009**

பெயர் : சின்னராஜு நாள்:20.11.2025

பி.வா.சா.2 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.2 – சின்னராஜு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம்: 11:59

அசல் வழக்கு எண்.217/2008 -ன் ஏற்பட்ட தீர்ப்பாணை படி இந்த நிறைவேற்று மனு எண். 26/2012-ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். நிறைவேற்று மனு எண்.26/2012-ல் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால், சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் செய்து தரக்கோரி தாக்கல் செய்துள்ளேன். தீர்ப்பிற்கு பின்னிட்டு பாலசுப்ரமணியனை கிரையம் செய்து தரக்கோரி கேட்டேனா என்றால், இல்லை. மீதி கிரையத்தொகை ரூபாய் 40,000/- த்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளேனா என்றால், ஆமாம். மீதி கிரையத்தொகை சமூக நீதிமன்றத்தில் உள்ளதா இல்லை பாலசுப்ரமணியம் பெற்றுக்கொண்டாரா என்றால், பாலசுப்ரமணியம் பெற்றுக் கொண்டார். இடைக்கால மனு எண். 120/2008 காசோலை மனுபடிக்கு பாலசுப்ரமணியம் கிரையம் செய்து தராமல் மீதி தொகையை ரூபாய் 40,000/-த்தை பெற்றுக் கொண்டதை எதிர்த்து நான் ஆட்சேபனை ஏதும் செய்யவில்லை என்றால், சரிதான். பொதுவாக கிரையம் செய்து கொடுக்காமல் மீதி தொகையை கொடுக்கமாட்டார்கள் என்றால், சரிதான். எனக்கு தீர்ப்புப்படி கிரையம் செய்து கொடுத்தால் தான் மீதி கிரையத்தொகையை கொடுப்பேன் என்று நான் ஆட்சேபனை செய்தேனா என்றால், எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய வழக்கறிஞர் மீதி தொகையை பெற்றுக் கொள்ள ஆட்சேபனை ஏதும் இல்லையென்று கூறியதால் தான் பாலசுப்ரமணியம் மீதி தொகையை பெற்றுக் கொண்டார் என்றால், எனக்கு ஞாபகமில்லை. அந்த காசோலை மனுவானது எனது வழக்கறிஞரின் இரப்பர் ஸ்டாம்பின் சீலை அடித்துவிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. பாலசுப்ரமணியம் என்னிடம் வஞ்ச கூட்டணி சேர்ந்து கொண்டு வழக்கை தாக்கல் செய்வது போல் தாக்கல் செய்து அதில் ஒருதலைபட்சமாக பாலசுப்ரமணியம் வழக்கை ஒப்புக்கொண்டு தீர்ப்பை பெற்று பின்னிட்டு மீதி

கிரையத்தொகையை வைப்பீடு செய்வதுபோல் வைப்பீடு செய்து திரும்பவும் பாலசுப்ரமணியம் கிரையத் தொகையை பெற்று கொண்டுள்ளார் என்றால், சரியல்ல. உண்மையில் பாலசுப்ரமணியம் கிரையம் செய்து கொடுக்க தயாராக இருந்திருந்தால் எனக்கு கிரையம் செய்து தந்த பிறகுதான் மீதி கிரையத் தொகையை பெற்றுக் கொண்டிருப்பாரா என்றால், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததால் மீதி கிரையத் தொகையை வைப்பீடு செய்துள்ளேன். பொதுவாக சொத்தின் உரிமையாளர் தான் கிரையம் செய்து கொடுக்க ஆட்சேபனை இல்லை என்று கூறுவார்கள் என்றால், சரிதான். ஒருவர் சொத்திற்கே உரிமை இல்லாதவர் என்றபோது ஏற்றதை ஆற்றுக வழக்கில் கிரையம் செய்து தரக்கோரி சொல்வது சரியா என்றால், சரிதான் பாலசுப்ரமணியனுக்கு இந்த வழக்கில் உரிமை உள்ளது. அ.வ.எண்.217/2008-ஐ எப்போது தாக்கல் செய்தேன் என்றால், 2008-ம் ஆண்டு. தேதி மற்றும் மாதம் எனக்கு சரியாக ஞாபகமில்லை. இந்த வழக்கை 28.07.2008-ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். 02.09.2008-ல் வழக்கை ஒப்புக்கொண்டு தீர்ப்பை பெற்றுள்ளேன் என்றால், சரிதான். பாலசுப்ரமணியம் நான் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே 05.06.2008-ல் மணிவாகத்திற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்து சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பத்தி எண். 10-ல் "மனு சொத்தை மேற்படி பாலசுப்ரமணியம், மணிவாசகத்திற்கு மோசடியாக கடந்த 05.06.2008-ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்கண்ட 05.06.2008-ம் தேதிய கிரைய பத்திரமானது நடைமுறைக்கு வராத ஒன்றாகும்" என்று குறிப்பாக கூறியிருக்கிறேனா என்றால், சரிதான். சாட்சி பின்னிட்டு மேற்படி விபரம் அ.வ.எண். 250/2012 தாக்கல் செய்த பின்னிட்டு தான் தெரியும். இந்த விபரத்தை தற்போது தான் கூறுகிறேன் என்றும், எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால், சொல்லியுள்ளேன். அ.வ.எண். 250/2012 வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்தார் என்றால், அருள்முருகன் என்பவர் என் மீதும், பாலு மற்றும் கணபதி ஆகியோர்களின் மீது வழக்கை தாக்கல் செய்திருந்தார். அ.வ.எண். 217/2008 வழக்கின் வழக்கறிஞர் யார் என்றால், வழக்கறிஞர் திரு. ஆர். சேகர் அவர்கள் பின்னிட்டு வழக்கறிஞர் திரு. எஸ். கிறிஸ்டோபர் அவர்கள் வழக்கறிஞராக இருந்தார். 05.06.2008-ம் தேதியன்று பாலசுப்ரமணியம் இந்த வழக்கு சொத்தின் உரிமையாளர் இல்லை என்றும், அவர் நாங்கள் தாக்கல் செய்த ஏற்றதை ஆற்றுக வழக்கில் வழக்கு சொத்தை கிரையம் செய்து தருவதாக ஒப்புக் கொண்டது சட்டப்படி அவருக்கு உரிமை

இல்லை என்றால், சரியல்ல. அந்த தீர்ப்பை அடிப்படையாக வைத்து நான் கிரையம் செய்து தரக்கோருவது சட்டப்படி சரியல்ல என்றால், தவறு. அதேபோல் அவருக்கு உரிமையில்லாத சொத்திற்கு சம்மந்தப்பட்ட மீதி கிரையத்தொகையை நீதிமன்றத்திலிருந்து பெற சட்டப்படி உரிமை இல்லை என்றால், சரியல்ல. நீதிமன்ற நடவடிக்கைகளை நாங்கள் மூவரும் எங்கள் வசதிக்கு தகுந்தாற்போல் பயன்படுத்தி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பெற்றிருக்கிறோம் என்றால், சரியல்ல. இது நீதிமன்ற நடவடிக்கைகளை தவறாக பயன்படுத்துவது என்றால், சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் :12.59</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R
Digitally signed by ELAMATHI R
Date: 2025.11.20 17:59:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.